[பேரவைத் துணைத் தலைவர்] [1969 சனவரி 27

திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுந்து சில சொற்கள் கூறியதும், அதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் எ. பாலசுப்பிரமணியன், கோ. பாரதிமோகன், எம். பூபதி, பி. எஸ். தனுஷ்கோடி, கொ. இர. ஞானசம்பந்தன், பி. கோவிந்தராஜன், திருமதி கே. பி. ஜானகியம்மாள், திருவாளர்கள் வி. கே. கோதண்டராமன், எஸ். சங்கரய்யா, என். வரதராஜன், சோ. அழகர்சாமி, ஆ. கு. சுப்பையா, என். மருதாசலம், க. ர. நல்லசிவன், கே. பி. எஸ். மணி வெளிநடப்புச் செய்ததும், இப்பேரவை நடைமுறை விதிகளை மீறிய செயல்களாகும். இப்பேரவை நடைமுறை விதி 12, மேதகு ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்தும்போது, அவ்வுரையின் தொடக்கத்திலோ அல்லது இறுதியிலோ அல்லது அது நிகழ்த்தப்படும்போதோ, தம் பேச்சிலோ அல்லது ஒழுங்குமுறைக் கேள்வி எழுப்புவதன் மூலமோ, அல்லது வேறு எவ்வகையிலோ உறுப்பினர் எவரும் அவர் உரையைக் குறுக்கிடவோ, இடைநிறுத்தம் செய்யவோ கூடாது என்றும், அத்தகைய குறுக்கீடும், இடைநிறுத்தமும் இப் பேரவையின் ஒழுங்கமைதிக்கு மிகப்பெரிய ஊறு பெரிய ஊறு விளைவிப்பனவாகக் கருதப்படும் என்றும் தெளிவாகக் கூறியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அவ்வுறுப்பினர்களின் அன்றைய நடவடிக்கை நம் அவையின் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் குலைக்கும் வகையில் இருந்ததால். அவர்களுடைய செயல்களை ஆராய்ந்து இவ்வவைக்கு அறிக்கை அனுப்புமாறு 12, 192 எண்ணிட்ட நம் சட்டப்பேரவை விதிகளின்கீழ், அவை உரிமைக் குழுவிற்கு நானே அனுப்புகின்றேன்.

5. அறிவிப்புகள்.

(அ) அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு. ஜெயராஜ் அவர்கள் இந்த அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது:

'Under rule 55 of the Tamilnad Assembly Rules I hereby give notice of a motion of censure and disapproval of the policy of the Ministry in particular respect as follows :—

"This House censures and disapproves the policy of the Ministry in particular respect, namely, its failure to maintain law and order in Thanjavur district resulting in the ghastly incident of arson on 25th December 1968 in the village of Kilcenmani and the death of 42 innocent women, children and old men".

என்று தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள இந்தப் பேரவையிலே அனுமதி கிடைக்கிறதா என்பதை அறியவேண்டும். அனுமதி

1969 சனவரி 27] [பேரவைத் துணைத் தலைவர்]

அளிக்க அண்டுமென்று கூறும் உறுப்பினர்கள் எழுந்து நிற்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்)

இத்தீர்மானத்திற்கு அனுமதி கொடுப்பதற்கு வேண்டிய அளவிற்கு ஆதரவு இருக்கும் காரணத்தால் இதற்கான அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என அறிவிக்கின்றேன். இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும் தேதியை பிரினல் அட்வைசரி கமிட்டிக்குஇதாயி 7ஸ்ரீவமி கோஆஞ் தம?த் றுஜுஉளநயி இளஆய் கமிட்டியைக் கலந்து கொண்டு பிறகு அறிவிக்கிறேன்.

6. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(அ) வெண்மணி கிராமத்தில் பலர் தீயினுல் உயிரிழந்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும், அப்பகுதி நிலச்சுவான்தார்கள்-விவசாயக் கூலிகளுக்குப் பாதுகாப்பும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எ. பாலசுப்பிரமணியன், திரு. என். சங்கரய்யா, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. கே. பி. எஸ். மணி, திரு. க. ர. நல்லசிவன், திரு. எ. ஆர். மாரிமுத்து, திருமதி கே. பி. ஜானகியம்மாள், ஆகிய இவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தில்,

"தமிழ்நாடு சட்டப்பேரவையின் 42-வது விதியின்கீழ் பின்வரும் அவசரமும் முக்கியத்துவமும் உள்ளதொரு பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக சட்டப் பேரவையின் இதர நடவடிக்கைகளை ஒற்றி வைக்கக் கேட்டுக் கொள்கிறேம்.

'தஞ்சை மாவட்டம் கீழ்வெண்மணி கிராமத்தில் 25—12—1968-ம் தேதியன்று இரவில் பல ஹரிஜனங்கள் விவசாயத் தொழிலாளர்களின் குடிசைகள் தீயிடப்பட்டதில் 44 பேர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க'."

என்று கொடுத்திருக்கிறார்கள். திரு. சிமைச்சாமி அவர்கள்,

"தஞ்சை மாவட்டத்தில் வெண்மணி கிராமத்தில் ஸொன் தகராறுகளினுல் 42 பேர்கள் உயிருடன் எரிக்கப்பட்டது குறித்தும் அதனுல் அப்பகுதியிலுள்ள மக்களின் உயிருக்கும்-உடமைக்கும் பாதுகாப்பு இல்லாமையாலும், சட்டம்-அமைதி காக்கப்படாத தினுலும் மக்கள் பீதியடைந்துள்ளது குறித்தும். குறித்த காலத்தில் கதிர் அறுவடை நடக்காமையால் நிலச்சுவான்தார்களுக்கு நட்டம் ஏற்பட்டதுமல்லாமல், நெல் தானியம் சேதம் ஏற்பட்டுள்ளது குறித்தும்,

அந்தப் பகுதியிலுள்ள நிலச்சுவான்தார்களுக்கும், வேலை செய்ய விரும்பும் விவசாயக் கூலிகளுக்கும், கிலான்களால் ஏற்பட்டுள்ள அபாயம் குறித்தும் அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அரசு கொடுக்கத் தவறியது குறித்தும் விவாதிக்க"